**OS.340/2022 P.W.1-சுந்தரம் த/பெ.ஏகாம்பரம் 07.08.2026**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் என் மனைவி ஆசிரியராக இருந்தார், பிரதிவாதியும் ஆசிரியராக இருந்தார், அதன் மூலம் தெரியும். நான் மதுராந்தகம் நகராட்சியில் பில் கலெக்டராக வேலை பார்த்து ஆகஸ்டு 2010ல் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். என் மனைவி 2024ல் ஆசிரியராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுவிட்டார். பிரதிவாதிக்கு பணி ஓய்வு பெற இன்னும் 2 ஆண்டுகள் உள்ளது. எனக்கு பிரதிவாதியை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 20 ஆண்டுகளாக தெரியும்.

2. இந்த வழக்கு பரிவர்த்தனையை தவிர வேறு எந்த பரிவர்த்தனையும், வழக்கும் எனக்கும், பிரதிவாதிக்கும் இடையில் இல்லை. 16.02.2020க்கு 3 மாதங்களுக்கு முன்னதாக என்னிடம் பணம் கேட்டார், நான் பிரதிவாதிக்கு பணம் 16.02.2020 அன்று கொடுத்தேன். பெருமாள் கோவில் தெரு, மதுராந்தகத்தில் பத்திரம் எழுதும் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். வசந்தகுமாரி, ஜெகதீஷ் ஆகியோர்கள் முன்னிலையில் கொடுத்தேன். பணம் ரூபாய் 12 லட்சத்தை ரொக்கமாக கொடுத்தேன்.

3. ரூபாய் 12 லட்சத்தை என் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். அந்த வருமான வரி கணக்கை பார்த்தால் நான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி இருப்பது தெரியவரும் என்றால் சாட்சி முதலில் வருமான வரி செலுத்தி வருவதாகவும், பிறகு வருமான வரி செலுத்தவில்லை எனவும் மாற்றி கூறுகிறார். நான் உண்மையாக பிரதிவாதிக்கு ரூபாய் 12 லட்சம் கொடுத்திருந்தால் அது வருமான வரி கணக்கில் காட்டப்பட்டிருக்கும், மேற்படி பணம் வருமான வரி கணக்கில் காட்டப்படவில்லை என்பதால் தற்போது நான் வருமான வரி செலுத்தவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4. நான் பிரமாண வாக்குமூலத்தில் வசந்தகுமாரி, ஜெகதீஷ் ஆகியோர்கள் சாட்சி கையொப்பமிட்டு தட்சணாமூர்த்தி என்பவா் கடனுறுதி சீட்டை எழுதியதாகவும் சொல்லியுள்ளேன், மேற்படி விவரத்தை என்னுடைய பிராதிலும், வழக்கு அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் என்ன காரணம் சொல்லி பணம் வாங்கினார்கள் என்ற விவரத்தை என்னுடைய பிராதிலும், வழக்கு அறிவிப்பிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியும், அவரது அக்காவும் ஒருவரை திருமணம்

செய்துக் கொண்டார்கள், அவர்களது பிள்ளைகளின் படிப்பு செலவிற்காகவும், திருமண செலவிற்காகவும் கடன் வாங்கினார்கள்.

5. வழக்கு அறிவிப்பு அனுப்புவதற்கு முன்னதாக 10 முறை அவரது வீட்டிற்கு சென்று கடனை திருப்பி தரும்படி கேட்டேன். என் மனைவியும், என் பிள்ளைகள் அனைவரும் வீட்டில் இருந்தார்கள், நான் பஜாரில் வைத்து பணம் கொடுத்தேன். பணம் கொடுக்கும் போது என் மனைவியை நான் அழைத்து செல்லவில்லை. பணம் கொடுத்து, வாங்குவது என்னுடைய தொழில் இல்லை. ரூபாய் 12 லட்சம் கொடுத்ததற்கு என்ன ஆதாரம் வாங்கினேன் என்றால் கடனுறுதி சீட்டோடு சேர்த்து வேறு எந்த ஆவணமும் பெறவில்லை.

6. கடன் கொடுத்த அன்றே பிரதிவாதி கையொப்பம் போட்டார். சாட்சியும் அப்பொழுதே கையொப்பம் போட்டார். கடனுறுதி சீட்டு தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முன்னதாகவே கடனுறுதி சீட்டை தயார் செய்யவில்லை, பிரதிவாதி வந்த பிறகு தான் தயார் செய்யப்பட்டது. வெற்று தாளில் கையொப்பம் போட்டு பிரதிவாதி என்னுடைய மனைவி அமுதாவிடம் கொடுத்ததை நானாக நிரப்பிக் கொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி என்ன காரணத்திற்காக பணம் வாங்கினார் என்று சொல்லவில்லை என்றால் கடனுறுதி சீட்டில் சொல்லியுள்ளேன்.

7. என் மனைவி அமுதாவை விசாரித்தால் கடனுறுதி சீட்டு யாரிடம் கொடுத்தார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டு நான் சொன்னவாறு தயார் செய்யப்படவில்லை, வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. முன்னதாகவே அனுப்பியிருந்தால் என்ன காரணத்திற்காக பணம் வாங்கினார் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் எனக்கும், எனது வழக்கறிஞருக்கும், என் மனைவிக்கும் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதில் வெற்றுதாள் என் மனைவியிடம் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. எனக்கு ரூபாய் 12 லட்சம் கொடுப்பதற்கு எந்த வசதியும் இல்லை என்றால் சரியல்ல. என் மனைவி 2024 வரை ஆசிரியராக பணியில் இருந்தார். நான் 2010 வரை நானும் பணியில் இருந்தேன் என்பதால் எனக்கு வசதி உள்ளது. வீட்டில் இருந்து எடுத்து கொடுத்ததாக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு சம்பளம் வங்கி கணக்கில் தான் வந்து சேரும் என்றால் சரிதான். என் மனைவியின் வங்கி கணக்கை பார்த்தால் எப்பொழுது பணம் எடுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவரும். எனக்கும், பிரதிவாதிக்கும் நேரடியாக எந்த பண பரிவர்த்தனையும் கிடையாது என்றும், என் மனைவிக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் ஒரு லட்சத்தை ஏற்கனவே கொடுத்து முடித்து விட்டார் என்றால் சரியல்ல.

9. நானும், என் மனைவியும் அதிகப்படியான கந்துவட்டிக்கு ஆசைப்பட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்காக பினாமியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை